Ph : 04175 - 236654 | 235295

# SHANMUGA INDUSTRIES
# ARTS & SCIENCE COLLEGE (Co-Ed)

Certified Under Section 2(f) & 12B of UGC Act 1956, An ISO - 9001 - 2015 Certified Institution

Permanently Affiliated to Thiruvalluvar University, Vellore and Approved by the Govt. of Tamil nadu & AICTE, NewDelhi

Manalurpet Road, Tiruvannamalai - 606 603, E-Mail : shanmugacollege@gmail.com, Website : www.shanmugacollege.edu.in

22.02.2021

## சண்முகா கல்லூரியில்
## உலக தாய்மொழி நாள் விழா

திருவண்ணாமலை சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரியில் உலக தாய்மொழி நாள் நிகழ்ச்சி கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக, திருவண்ணாமலை, புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற, மாநில துணைச் செயலாளர் **பாவலர் வையவன்** கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கல்லூரியின் தலைவர் **ஜி.புல்லையா** அவர்களின் வாழ்த்துகளோடு நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் செயலர் மற்றும் தாளாளர் **டி.ஏ.எஸ்.முத்து** முன்னிலை வகித்தார். பொருளாளர் **எம்.சீனுவாசன்**, கல்விப்புல முதன்மையர் பேரா. **அழ.உடையப்பன்,** முதல்வர் முனைவர் **கே. ஆனந்தராஜ்** உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர். தமிழ்த்துறைத் தலைவர் **இரா. சங்கர்** முன்னதாக அனைவரையும் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர், திருவண்ணாமலை, புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்ற, மாநில துணைச் செயலாளர் **பாவலர். வையவன்** தனது உரையில் தமிழ்மொழியின் தோற்றம், வளர்ச்சி, தொன்மை, இனம் மற்றும் அவற்றின் சிறப்புகளைப்பற்றியும், ஏட்டில் உள்ள திருக்குறளை உலகெலாம் பரவச் செய்தல் வேண்டும் எனவும் எடுத்துக்காட்டினார். நிகழ்ச்சியின் நிறைவில் தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் **கு.இளங்கோவன்** நன்றியுரையாற்றினார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் **தீ.ஏழுமலை** தொகுத்து வழங்கினார்.

இந்நிகழ்ச்சியல் துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், அலுவலகப் பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவியர் உள்ளிட்டோர் திரளாகக் கலந்துகொண்டனர்.

**செயலர் மற்றும் தாளாளர்**


திருவண்ணாமலை மாவட்டம்
சண்முகா தொழிற்சாலை கலை அறிவியல் கல்லூரி
தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும்வகை
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை நடத்தும்
திங்கள் கருத்தரங்கம்
[மாணவர் திறன் வளர்ப்பு பயிற்சி]
நாள்: